

# அமரர் இளையதம்பி நடராஜா (தில்லைக்கூத்தன்)

அவர்கள்

சிவபதப்பேறு அடைந்தமை குறித்த

# 'நினைவு மலர்'

07.05.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி எய்திவிட்ட அமரர்

# "தில்லைக்கூத்தன்" இளையதம்பி நடராஜா

அவர்கள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 04.10.1928 | 08.04.2005 |

## சமர்ப்பணம்

உங்கள் மெய், தனம், ஆவி அனைத்தையும்
எமது நல்வாழ்விற்கும், நலத்திற்கும், குடும்ப மேம்பாட்டுக்கும் அர்ப்பணித்தீர்கள்.
உங்கள் நினைவு எங்களில் நிலை கொள்ளும்.
உங்கள் வழியில் எம் வாழ்வு தொடரும்.
எங்கள் மனச்சாந்திக்கும், உங்கள் ஆத்ம சாந்திக்குமாக
இம்மலரை உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

17, Pedris Lane
Colpetty
Colombo 3
Telephone: 2573845

மனைவி
மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eliathamby Nadarajah: A Tribute to Appah

Eliathamby Nadarajah was born on Fourth of October 1928 to Meenakshi and Eliathamby of Karampon West. He was the eldest son of a family of four children, with Kamaladevi, Kunamani and Suppiah being his siblings. As a studious student, Appah had his primary education at St. Anthony's College, Kayts, and later continued his secondary education at Jaffna Central College. Hailing from a lower middle class family, his intellectuality and leadership qualities were evident even during his early years for he was a senior prefect at Jaffna Central College and participated in many activities during his school life. It is noteworthy that Appah was the first student to gain admissions to the University of Peradeniya from his village. Consequently, he read for his Bachelors degree in economics and later proceeded towards his postgraduate training in economic planning at the United Nations Institute. On completion of his postgraduate training, he served at the Colombo Portcargo Corporation for many years in the 70's before he joined the United Nations (ESCAP, Bangkok) as a consultant on port performance indicators and statistics. An important milestone in his career was an invitation by the then secretary-general of United Nations (UNCTAD) to join a global group of six internationally renowned statistical experts. As a member of this prestigious group, he had the unique privilege of representing the ports of the entire countries of Afro-Asian region, including Australia and Japan. Against the backdrop of this professional history, from late 70's to mid 90's, Appah served in different ports of Saudi Arabia as a Senior Advisor of the statistical departments. On his return to Sri Lanka following his retirement in late 90's, he was actively involved in the rehabilitation of displaced Tamils from north and east under the patronage of UNDP.

Our Appah was not just a mere intellect but also a philanthropist and a humanitarian. He was never shy to extend his willing hands to those in need and his generosity towards his relatives and friends had overwhelmed many. His enthusiasm for education related activities has been evident from his many contributions made in the recent past. To



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mention a few, Appah was one of the earliest contributors for the rebuilding of Jaffna Public Library in the early 80's. Further, in memory of his late mother he founded an Endowment trust to fund disabled students registered at the University of Jaffna. Remarkably, until his final days he was involved in the designing of a scholarship programme by the Jaffna Central College Old Boys' Association.

Our Appah was also a man of political vision. Following his retirement from active professional life, he dedicated almost all his time to Tamil nationalism. In this regard, Appah has visited the UK and have high-lighted the Tamil problem, particularly human rights violations in Sri Lanka, through electronic media and made representations to AMNESTY international and other NGOs in the UK; many of these issues have been published as communications since 1998. His fervour in Tamil nationalism gathered momentum following his association with "Maamanithar" Kumar Ponnambalam. Following the demise of Mr. Ponnambalam, Appah was appointed as the senior vice president of the All Ceylon Tamil Congress. More recently, he functioned in the capacity of a political advisor to Western Province People's Front organisation. Our father's passion for the self-determination of Tamil community was unyielding. Using, the pen name of 'Thillaikoothan', he voiced his views through Tamil national dailies widely and loudly whilst living amidst his political rivals, without the fear of consequences. Over the last few years many of his articles have been compiled and have appeared as series of books. His writings, which are full of political wisdom, are readable to the lay. In summary, although our dear Appah was not born with a silver spoon, he made an honest living, lead an eventful life, served his family, friends, relatives and his beloved community to the best of his ability.


Farewell dear Appah!
May you rest in peace!

Loving,
**Ammah,**
**Pahin, Kunan,**
**Pamen, Jino and Pancha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Appah's days at United Nations*



*Appah's 74th Birthday*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Appah's active role in public life.....*








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்தமகன் கோத்து நிற்கும் விழிநீர்

அப்பா! உங்கள் மூத்த மகன் பகீன் உங்களை உயிருடன் காணவென்று ஓடோடி வந்தேன். நீண்ட பயணம் ஆகையால் மணித்துளிகள் நீண்டு உங்கள் அருகில் வந்தடைய அரை நாட்கள் ஆகிவிட்டன.
வீட்டு வாசலில் அம்மாவின் அவலக்குரல் கேட்டு கலங்கி நின்றேன்.

எத்தனையோ சோதனைகள், எனினும் தன் குடும்பம் காத்திடல் தன் கடனே! எனவொருமித்த மனத்திறனால் சித்தவுறுதி கொண்டு
இறங்கினார் வெளிநாட்டில் ஆலோசகராக!
நித்தமும் உழைத்தார் நேர்த்தியாகப் பாடுபட்டார்!

புத்திர புத்திரிகள் யாவரையும் நன்னிலையில் வைத்திடலே தன் கடமையென தளராது தந்து நின்றார்!
சட்டென்று வந்துபோகும் அவர் முன்கோபம்!
பட்டென்றே பேசுவதவர் வழமையான சுபாவம்!

தாய் தந்தையின் சுகதுக்கத்தில் பங்குகொண்ட பாசப்பிறப்பு
சேயென தன் உடன் பிறப்புக்களை அதட்டி அதட்டியே
நேயமாய் காத்தவர் நற்சேவையும் செய்தவரே!
தன் மருமக்களுக்கும் நல்வாழ்வு காட்டியவரே!

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சியில் பரிணமித்தது அவர் தமிழ்ப்பணிகள்!
தமிழரின் விடிவுக்காக தூங்காதவர் சிந்தனைகள்!
நாட்டுப் பற்றாளராகவும் பாராட்டப்பட்டுள்ளார்.

கரம்பனில் பிறந்து கொழும்பில் வாழ்ந்தாலும்
சிங்களமே பேசாமல் வாழ்ந்த சாதனையாளர் நீங்கள் ஆங்கில மொழியில் பயின்றவறென்றாலும் தமிழறிவென்ன, அரசியல் அறிவென்ன!

அவையின் முன்னால் நான் தில்லைக்கூத்தனின் மகன் என்று கூறுவது எனக்குப் பெருமை அப்பா!
உங்கள் மறைவின் பின்பும் ஒரு தமிழ் மகன் எனக்கு "உங்கள் அப்பா உங்களுக்கு மட்டும் இல்லை எங்களுக்கும் தான்" என்று ஓலமிட்டது என் நெஞ்சை உருக்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் இறுதியாக பகீன், பகீன் என்று தொலைபேசியில் கூறியது என் காதில் கணீர் கணீர் என்று ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது!

என்னுடைய தந்தைக்கு "நாட்டுப்பற்றாளர்" என்ற கௌரவத்தை கொடுத்த எமது தேசியத் தலைமைக்கு முதல் நன்றியைத் தெரிவித்து, சகல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், பத்திரிகை, அரசியல் துறை சார்ந்த அனைவருக்கும், இறுதிச்சடங்கில் கலந்து இரங்கல் உரை தந்த அனைவருக்கும் என் சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அப்பாவின் ஆத்ம சாந்திக்காய் இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மூத்த மகன் பகீரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Grand-Daughter

*It is often said that absence makes the heart grow fonder. That cliché rings no truer than on this sorrowful day. The man before you was a representative of many different forms. He was a respected and dignified man to his friend and associates, a loving husband to his wife, nurturing father to his children, an egnomatic grandfather to his grandchildren. To me he was a loving grandfather, friend, confidant and role model. My earliest recollections of Appappah are of a God like figure, large and important. His argumentative nature, infuriating at the best of times, and child like temper tantrums endearing to our hearts. His passion for politics lead to many great debates between him and myself. I know that this is what has inspired my ambitions to become a lawyer, his intrepediations and relentless spirit is installed in me. Time is feeling, our life on earth is as good as we make it. Appappah lived a full and meaningful life left us with many wisdoms and loving memories. It has been a pretty good innings, but the expected is always unexpected and I wish we had said goodbye.*

*So Good-bye Appappah.*

*Your granddaughter*
**Bharathy (Jenny) Balgunan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Grandson

*I apologies for my absence and would like to take this opportunity to say a few words in memory of my grandfather. Ammapah will be greatly missed by all his family and friends and by the Tamil community as a whole. Throughout his life he has made overwhelming contributions to the Tamil community and has devoted his life until the very last moments to this just cause. He has been a good role model for all to follow, especially his grandchildren by following an intellectual path in life yielding many achievements and successes. His attitude to life is also one that we can all learn from. He was an extremely righteous, generous person with no fear of speaking his opinions no matter what the consequence. He still lives on with all of us through our memories along with countless books and articles, which depict his passionate, intellectual side and also demonstrate the respect, he commanded in term of his political judgment. Once again I would like to say ammapah will be sorely missed by me and all that knew him and I regret that my father, my brother and I cannot be with you all now.*

*Yours sincerely*
**Nimalesh**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Appapah

*My Appapah was a great gentleman. He was very fond of children and always had fun with them. He always spoke of freedom. He was a fearless, short-tempered man but a with a very good heart. He was a Hindu like all of us, but he said his God is the Tamil Leader Prabhakaran. A few month before he passed away he performed an archanai / pooja for Prabhakaran at a Colombo temple saying as for his son. Appapah was very ill for sometime but when he was very seriously ill my dad left London immediately to see him. But when he arrived home Appapah had already passed away. My dad immediately called me and my mum to attend the funeral and we were happy to have attended and given our last respect. I was very shocked and was screaming after seeing my Appapah's body.*

*I have so many memories of my Appapah and I will never forget them. When I was a little boy Appapah wanted me to talk in Tamil and I always did since. I love my Appapah and I will always remember him. I am very proud as a grandson of this great Thillai Koothan and son of Bagirathan as both are ardent Tamil freedom seekers.*

*God Bless Appapah.*

**Brindon Bagirathan**
(Grandson)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்

## 76 ஆவது பிறந்ததினப் பெருவிழா 2003

2003ம் ஆண்டிற்க்கான வாழும் சான்றோரை
கௌரவிக்கும் நிகழ்வில் அவர் தம் அறிவு
ஆற்றலினால் தமிழினத்திற்கு கௌரவம்
சேர்த்ததோடமையாது தமிழினத்திற்கும்
தமிழ்மொழிக்கும் தம் பெரும் பங்களிப்பினைச் செய்த
சான்றோன் என எம் மன்ற நிர்வாகம் தீர்மானித்து

தில்லைக்கூத்தன் இ. நடராஜா அவர்கட்கு

## "மூதறிஞர்"

எனும் கௌரவத்தினை அளித்துமகிழ்கின்றோம்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

மேல் மாகாண ஆளுநர்

தலைவர்
கொழும்பு தமிழ் சங்கம்

தலைவர்
அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்

24.06.2003

24/06/2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHIPPING AND TOURISM

by LLOYD R. DEVARAJAH

# *Ceylonese expert serves on port conf. held in Geneva*

A CEYLON man — Mr. E. Nadarajah, Statistician of the Colombo Port Commission Port Cargo Corporation — was the only representative from the Afro-Asian developing countries to be invited by the Secretary-General of the UNCTAD to serve a member of the Export Group on Port Statistics, that conferred recently in Geneva. NiK

The Expert Group was convened to review and improve a draft report produced by the UNCTAD (United Nations Conference on Trade and Development) secretariat entitled Selection, Collection and Presentation of Port Statistics.

Mr. Nadarajah was among the six experts on the group at the conference held last month They included Prof. J. Gilbert, Professor of Economics, University of New York and Trade Economist of the New York Port Authority; Prof. M. Krzyzanowski, Professor of Economics Maritime Institute Gdansk, Poland; Mr. B. Wilson, Chief Statistician, National Ports Council, UK; Mr J. C. Van Oostenrijk, the Director of Statistics, Rotterdam Port, the Netherlands and Mr. E. Lugo, Galois, Director of Statistical Operations, Colombian Ports South America. The conference was presided by Prof. S. G. Sturmey of UNCTAD, an international authority on Shipping Economics.

The group of experts — all eminent personalities in the world of shipping statistics considered questions relating to the collection and presentation of statistics of ports with particular reference to the problem of establishing a manual of statistics which might be adopted by developing countries, including CEYLON.

The inadequate statistics collected in most ports provide a proper basis neither for assessing the needs of the ports in terms of development nor for ensuring that the expensive capital equipment is being efficiently used. Detail statistics are essential tools for port management in order to secure efficiency in the working of a port.

For the development of ports forecasts of future ship and cargo flows through the ports are required. Such forecasts can be made on a realistic basis, only when the proper statistics of past and present operations are available.

Mr. Nadarajah is presently serving ECAFE (Economic Commission for Asia and the Far East) as a consultant and has visited more than ten ports of Asia. Mr. Nadarajah naturally being the only Afro-Asian representative on the UNCTAD group played a leading part on behalf of the developing countries.

The 40-page confidential report that was re-drafted by the expert group will be submitted to the Committee on Shipping to be held in 1971 for necessary action.

Ceylon should be very proud of UNCTAD at its fifth session that we have an expert statistician on ports, whose experience and expert knowledge are being put to good use, by the world body.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

அப்பா என்று சொல்லி அன்பு மொழிபேசினோம்
தப்பா நெறி செல்லாமல் எப்போதும் எமைக் காத்தீர்
செப்பா மொழியினால் சிந்தை யெல்லாம் நிறைத்தீர்
எப்போதும் உம்முருவம் எம்நினைவில் வந்துறையும்

*— மக்கள் —*

கூடி மகிழ்கையில் குழந்தையாய் இருந்திட்டீர்
ஓடி உழைக்கையில் ஊருக்கினியவனானீர்
நாடி வந்தோருக்கெல்லாம் நாளெல்லாம் உதவிட்டீர்
வாடி நிற்கிறோமையா வாழிவிலுமை மறப்போமா

*— மருமக்கள் —*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரத்திரட்டு

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளைப் பேணுவாம்

## தேவாரம்

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதி சூடி
ஓர்பரந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

*– திருஞானசம்பந்தர் –*

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழயி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்த்தி
அயிரா வணமேறாது ஆன் ஏறு ஏறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

*– திருநாவுக்கரசர் –*

அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்தன் ஆருயிரதனை
வவ்வினாய் யுன்தன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யான் என விலக்கும்
சிந்தை யால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப்புன் கூர் உளானே.

*– சுந்தரமூர்த்திநாயனார் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோன்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவர்
முக்கணாநாற்பெருந் தடத்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டு கோணேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார் பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தைகெடப் புகலியர் கோன் அமுது செய்யத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல்கள் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென்றென்றுற் றுனைநாளுங்
கண்டுகொண்டின்புற் றிடுவேனே
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றிற் பெருமாளே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் அருளிய

## திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்ரக் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தென்ன வெண்ணகையாய்முன்வந் தெகிரெழுந்தென்
அத்தனா நந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணொக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணொரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர், ஏதவன்பேர், ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்பொற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீர் ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடு ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொழுகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான
வாருருவப் பூண் முலைளீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானை பாடி நலந்திகழப்
பங்கயப் பீம்புனல்பாஙய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெணணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

### திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான நாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்த னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானெ யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்


மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபச் செய்தி

### நாட்டுப்பற்றாளர் தில்லைக்கூத்தன்
### இளையதம்பி நடராஜா

தமிழீழ தாயகத்தையும் தமிழ்த் தேசியத்தையும் தமிழீழ தேசியத் தலைவரையும் பற்றோடு மதித்து வாழ்ந்த ஒரு நாட்டுப்பற்றாளரை இழந்துவிட்டோம்.

தமிழினம் விடுதலை பெறவேண்டும் என்ற உயரிய உணர்வோடு எப்போதும் இயங்கிவந்தவர் நாட்டுப்பற்றாளர் இளையதம்பி நடராஜா (தில்லைக்கூத்தன்) அவர்கள். எத்தகைய இடையூறுகள், அச்சுறுத்தல்கள் எல்லாம் வந்தபோதும் தனது நிலைப்பாட்டில் எந்தத் தளர்வும் இன்றி உறுதியாக நின்று தமிழ்த்தேசியத்தின் பக்கம் குரல்கொடுத்தவர் தில்லைக்கூத்தன். தனது வாழ்களத்தைப் பொருட்படுத்தாமல் தமிழின விடுதலையை விரும்பி அதனை மதித்து அதற்காக தனது எழுத்தையும் பேச்சையும் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்து இயங்கி வந்தார் அவர்.

தமிழ்த்தாயகத்தை திட்டமிட்டு சிங்கள ஆட்சியாளர்கள் சிதைக்க முற்பட்டபோதெல்லாம் தில்லைக்கூத்தன் அவர்களின் எழுத்துக்கள் அதனை வன்மையாகக் கண்டித்தன. அதே வேளையில் தமிழினத்தை விழிப்பூட்டி எதிரி மீதான எச்சரிக்கையையும் கவனத்தையும் ஏற்படுத்தியது இவருடைய பேனா. இதற்கு இவருடைய கட்டுரைகளும் நூல்களும் சாட்சியாக இருக்கின்றன. சிறந்த கல்வியாளராக இருந்த தில்லைக்கூத்தன் அவர்கள் தமிழீழ தேசியத் தலைவர் மீது பற்றும் மதிப்பும் கொண்டு அவருடைய தலைமையில் தனது விடுதலைப்பணியை மகிழ்வோடும் பெருமையோடும் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் பிரச்சினையையும் தமிழீழ போராட்டத்தையும் உலக அரங்கில் எடுத்துச் செல்வதிலும் தில்லைக்கூத்தன் தீவிரமாக உழைத்தார். தனது முதுமைக்காலத்திலும் கூட அவர் எந்தச் சோர்வுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் நின்று ஒரு தந்தைக்குரிய அரவணைப்போடும் உரிமையோடும் தனது பங்கையும் பலத்தையும் வழங்கினார்.

எல்லோரையும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணைத்து போராட்டத்தைப் பலப்படுத்துவதில் அக்கறைகொண்டிருந்த தில்லைக்கூத்தன் அவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் நாட்டுப்பற்றாளராக கௌரவித்துள்ளோம்.

இத்தகைய பெருமைகளுக்கும் மதிப்புக்குமுரிய பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களுக்கு எமது இறுதி வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டுப்பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களின் குடும்பத்தாருடைய துயரில் தமிழீழ மக்களுடன் நாமும் பங்குகொள்கின்றோம்.

"புலிகளின் தாயகம் தமிழீழத் தாயகம்"

அரசியல்துறை
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்
10.04.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் அனுதாபச் செய்தி

### தமிழ்த்தேசிய சிந்தனைகளையே மூச்சாகக் கொண்டவர் "தில்லைக்கூத்தன்" நடராஜா

தமிழ்த்தேசியம் வெற்றிவாகை சூடவேண்டும், பேரினவாத தேசியம் தோற்கடிக்கப்பட வேண்டும், துரோகிகள் இனங்காட்டப்பட வேண்டும் என வீரமுழக்கம் செய்துவந்த குரல் இன்று ஓய்ந்துவிட்டது. இறுதி மூச்சுவரை தான் கொண்ட கொள்கையிலிருந்து இம்மியும் விலகாமல் தமிழ்த் தேசிய உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் சுடர்விட உந்துசக்தியாக இருந்து தமிழ்த்தேசிய அரசியலின் தேசிய உரிமைப் போராட்டத்திற்கு இலங்கையின் மேற்கு கரையின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து மறைந்துவிட்ட வித்தகர் மூதறிஞர் தில்லைக்கூத்தன் அவர்களுடைய மறைவு ஒரு வெற்றிடத்தை விட்டுச் சென்றிருக்கின்றது. தமிழ் உணர்வினை ஊட்டிவந்த அவரது பேனா ஓய்வு கண்டு விட்டாலும் அவரெழுதிய எழுத்துக்களின் படிமம் வரலாற்றில் மீட்கப்படும், அசைபோடப்படும், எதிர்காலத்தில் ஆய்வு செய்யப்படும்.

ஐ.நா. சேவையிலிருந்து ஓய்வுபெற்று நாடு திரும்பி தலைநகரிலிருந்து தமிழர் தம் உரிமைகளுக்காக உரிமைக்குரல் எழும்பிய காலம் தொட்டு ஆரம்பித்த உறவு பின்னர் அவர் எனது உணர்வுகளைப் புரிந்துகொண்டபோது நெருக்கமாகி தலைநகரில் எமது ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும், இறுதியாக Durdans Hospital இல் இறுதி மூச்சினை அவர் சுவாசிப்பதற்கு சில நிமிடங்கள் இருக்கும்வரை மட்டுமல்ல இன்று நினைவுகளோடும் என்னோடும் பின்னிப் பிணைந்துவிட்டதொன்று. தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுமை இறுதி எல்லையை அடைந்துவிட்டது, சர்வதேச சமூகம் இனியும் புலிகளது பொறுமையை சோதிக்கக் கூடாது. நிலைதொடருமானால் தமிழ்த்தேசியம் வெற்றிவாகைசூடும் நாள் வெகு தூரத்தில் இல்லை என அவரது மறைவிற்கு ஒரு கிழமைக்கு முன்னதாகத்தான் நானும் நண்பர் கலாநிதி குமரகுருபரனும் அவரை அவரது இல்லத்தில் சந்தித்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயின் களைப்பிலும் எடுத்துரைத்தார். நீண்ட நாட்களாக ஒரு Ambulance இல் ஏனும் வன்னி சென்று வரவேண்டும் எனும் அவா இருந்தது. தலைநகரிலும் தமிழன் ஒருமைப்பாட்டுடன் தன்மானத்துடன் தனித்துவம் காத்துக்கொண்டே பேரம் பேசும் சக்தியை வெளிப்படுத்தி இராஜதந்திர லாவகத்துடன்தான் உரிமைகளை வெல்ல வேண்டுமே தவிர பேரினவாத கட்சிகளின் அடிவருடிகளாக அல்ல. அவ்விதம் தமிழன் மாறக் கூடாது. பேரினவாத கட்சிகளுடன் பேசுவோம், எமது உரிமைக்குரலை வலியுறுத்துவோம். அவர்களுக்கு எமது ஆதரவு தேவையானால் சாணக்கியத்துடன் அதைப் பயன்படுத்துவோம், ஆனால் விலை போகாது எமது தனித்துவத்தைக் காப்போம் எனும் அவரது அரசியற் சிந்தனையை மேல்மாகாண மக்கள் முன்னணியின் ஆலோசகர் எனும் வகையில் எமக்கு எடுத்துரைத்திருக்கின்றார். அவரது நம்பிக்கை நிஜமாக அவர் கண்ட பாதையிலேயே தமிழ்த்தேசியத்தின் ஒருமைப்பாட்டின் தன்மானத்தின் சின்னமாகத் தலைநகரில் விளங்கும் என்பது திண்ணம். எமது கோட்பாட்டாசிரியர் தில்லைக்கூத்தனின் பேனா தமிழ்த்தேசியத்தின் போராட்டம், தமிழ்த்தேசிய உணர்வு, ஆங்காங்கு திரண்டு வாழும் தமிழினத்தின் ஒருமைப்பாடு தமிழ்த்தேசியத்திற்கான நேசக்கரம், தார்மீக ஆதரவு, தார்மீக கடமை. பிற நாடுகளின் பிடியில் எமது தேசியத்தின் நியாயப்படுத்துகை என்பதற்கப்பால் வேறெதையும் எழுதாத அளவிற்கு தனித்தேசிய உணர்வு கொண்டது. எமது மேல் மாகாணத் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டிற்கும் தன்மானத்திற்குமான சின்னமாக, பாசறையாக தில்லைக்கூத்தன் கொண்ட நம்பிக்கைக்குரியவன் எனும் வகையில் மேல்மாகாண மக்கள் முன்னணி எம்முடன் தோளோடுதோளாக, நெஞ்சோடு நெஞ்சாக, சித்தத்தோடு சித்தமாக விளங்கி மறைந்த "தில்லைக்கூத்தன்" நடராஜா அவர்களின் மறைவு எமக்கும் தமிழ் தேசிய சிந்தனையாளர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

**மனோ கணேசன்**

பாராளுமன்ற உறுப்பினர்

தலைவர் மேல்மாகாண மக்கள் முன்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாராளுமன்ற உறுப்பினர் மா. க. ஈழவேந்தனின் அனுதாபச் செய்தி

## தில்லைக்கூத்தனின் திடீர் மறைவு எம்மைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது

'தில்லைக்கூத்தன் தென்பாண்டி நாட்டான்' என்று தில்லைக்கூத்தனை தென்பாண்டி நாட்டானாக மணிவாசகத்தில் உரிமை கொண்டாடுகின்றார். ஆனால் எம் தில்லைக்கூத்தனோ தீந்தமிழர் அனைவருக்கும் பொதுச்சொத்தாக விளங்கியவர். அவர் ஏறக்குறைய எழுதிய 160 கட்டுரைகளிலும், 'இலங்கைத் தமிழர் கண்ணீர்', 'யாமார்க்கும் குடியல்லோம்', 'தமிழரின் விடிவு' ஆகிய நூல்களில் தீட்டியுள்ள கட்டுரைகளிலும் திசைமாறிச் சென்ற தமிழருக்குத் தெம்பூட்டி தீர்க்கமான பாதையிற்செல்ல வழிகாட்டியுள்ளார். இத்தகைய பெருமகன் எவரும் எதிர்பாராத நிலையில் 08.04.2005 அன்று திடீர் என மறைந்தது எம்மைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. எம்மை ஆற்றொனாத் துயரில் மூழ்கடித்து கண்ணீர் மல்க வைக்கிறது.

தில்லைக்கூத்தன் அவர்கள் எனக்கு 1980 தொடங்கி இதுகால வரையில் நன்றாகத் தெரிந்தவர். நான் 14, செயிற்குடியிருப்பு, எழும்பூர், சென்னையில் தங்கியிருந்த பொழுது என்னுடன் இவரும் சில காலம் தங்கியிருந்தார். ஈழத்தமிழர்களுடைய எதிர்காலம் பற்றி எம் இருவருக்கிடையே நிற்றையக் கருத்துப் பரிமாறல்கள் நிலவின. இவ்வுரையாடலில் இருந்து நான் கண்டறிந்த உண்மை, இவர் ஓர் சாதாரண பேர்வழி அல்ல. ஐ.நா. மன்றத்திலும் பணியாற்றியவர். ஈழத்தமிழர் சிக்கலை அனைத்துலகச் சிக்கலாக்கித் தீர்வுகாண இவரைப் போன்று ஒருவரை எளிதில் காண்பது கடினம் என உணர்ந்த நான், தமிழர் அல்லாத அரசியல் அறிஞர்களுடன் அவரை அடிக்கடி தொடர்புகொள்ளும்படி தூண்டியதுடன் சிந்தனைகளைத் தூண்டும் கட்டுரைகளையும் வடித்துத்தாருங்கள் என்று நான் விடுத்த வேண்டுகோள் முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையிலும், பெருமளவு நிறைவேற்றப்படும் முறையிற்றான் அவர் வரைந்த கட்டுரைகளும் எழுதிய மேற்குறித்த நூல்களும் இதற்குச் சான்றாக விளங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 டிசம்பர் 4ம் நாள் நான் சடுதியாக இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் மொறட்டுவையில் என் தங்கையின் இல்லத்தில் தங்கியிருந்த்போது என்மீது பற்றும் பாசமுமுள்ள உறவினர்கள் கூட என்னைச் சந்தித்தால் தமக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதி, என்னைச் சந்திக்க வராதது மட்டுமல்ல, தெருக்களில் என்னை எதிர்பாராமல் சந்தித்தபோது கூட என்னுடன் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டார்கள். பழைய பற்றுக்காரணமாக என் உறவினர்கள், நண்பர்கள் இல்லங்களுக்கு அவர்களைப் பார்க்க நான் சென்றபோது கூட என்னுடன் உரையாடுவதில் அவர்களுக்கு தயக்கமும் அச்சமும் இருந்ததை அவர்களது முகங்கள் எடுத்துக்காட்டின. இச் சூழ்நிலையிற்தான் நான் மொறட்டுவவில் என் தங்கையின் இல்லத்திற்கு வருகை தந்த அவர் என்னை அரவணைத்து அளவளாவிய காட்சி இன்னும் என் நினைவில் உள்ளது. அத்துடன் நான் தயங்கிய நிலையிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை என் உடனடிச் செலவிற்காக என் கைகளுக்குள் திணித்ததை நான் எண்ணிப்பார்க்கின்றேன். இது அவர் தனி ஒரு அறிவாளி மட்டுமல்ல நல்ல ஒரு தமிழ் உணர்வாளர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

'ஆயுதம் தாங்கத் தெரியாத உங்களால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு என்ன ஆபத்து ஏற்படுமென்று இந்தியா அஞ்சுகின்றது' என்று கேட்டு புன்முறுவல் பூத்த அவர் 'உங்கள் சொல்லாற்றல் எழுத்தாற்றலைக் கண்டு இந்தியா இவ்வளவு தூரம் அஞ்சுகின்றதா?' என்று மீண்டும் புன்முறுவல் பூத்தார். அவர் தன் உரையாடலில் இந்தியா எங்களோடு இல்லை என்பது மட்டமல்ல அது எங்களுக்கு எதிராகத்தான் செயற்படும் என்று கூறியதில் எவ்வளவு உண்மை உண்டு என்பதை, இன்றும் இந்தியா ஈழத்தமிழர் சிக்கலையொட்டி எமக்கு மாறாக செயல்படுவதில் இருந்து நாம் அறியத்தக்கதாக இருக்கின்றது.

அண்மைக்காலத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எமக்கு எத்தகைய ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை "தினக்குரல்" செய்தி இதழில் சுட்டிக்காட்டி அவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் அவரது தொலைநோக்குச் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாகும். இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத்தூதுவர், அவரது இல்லம் சென்று 'ஏன் நீங்கள் இந்தியாவிற்கு எதிராக கட்டுரைகள் வரைகின்றீர்கள்' எனக் கேட்டபோது, 'ஈழத்தமிழருக்கு எதிராக நீங்கள் திட்டமிட்டு செயலாற்றும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை நான் வாழ்த்துவதா?' என்று காரணங்களைக் காட்டி அவர் கருத்துக் கூறியபோது துணைத் தூதுவர் வாய் பேசாது புன்முறுவல் பூத்தநிலையில் திரும்பிச் சென்ற நிகழ்ச்சியும் என் நினைவுக்கு வருகின்றது.

இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் எவ்வளவு பாரதூரமான விளைவுகளை ஈழத்தமிழருக்கு ஏற்படுத்தும் என்பதை அவர் எடுத்துக்காட்டிய காரணங்களின் அடிப்படையில் அவருக்கு வழிமொழிந்து நான் எழுதிய கட்டுரைகளையும் அறிக்கைகளையும் வாழ்த்தி, தொலைபேசியில் அவர் என்னுடன் தொடர்புகொண்டதை நன்றி உணர்வோடு நான் நினைவு கொள்கின்றேன்.

எம் எதிர்ப்பின் விளைவுதான் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோ. அவர்களும் தமிழர் தேசிய கட்சியின் தலைவர் பழநெடுமாறன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர். இராமதாஸ் அவர்களும் இப்பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்து வருவதன் விளைவு, இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் நல்மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

எனினும், விழிப்புணர்வுடன் இருப்பதுதான் நாம் விடுதலைக்குக் கொடுக்கின்ற விலை என்பதற்கமைய நாம் விழிப்போடு இருந்தால்தான் நாம் எதிர்நோக்குகின்ற ஆபத்துக்களைத் தடுக்க முடியும். இத்தகைய விழிப்புணர்வை ஊட்டிய திரு. தில்லைக்கூத்தன் அவர்கள் எம்முடன் இன்று இல்லை என்பதை நினைக்கும் போது எம் கண்கள் கலங்குகின்றன.

இவர் ஐ.நா. மன்றத்தின் சவூதி அரேபியா, சிங்கப்பூர் தெற்காசியாவிற்கான துறைமுக தாவரவியல், அறிவியற் துறையின் மதியுரைஞராகவும் விளங்கியவர். உலகம் மதித்த இந்த நுண்மான் நுழைபுலம் படைத்த இவரை ஈழத்தமிழினம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை எனினும் ஓரளவாவது அவரின் இறுதிக்காலத்தில் பயன்படுத்தியது எமக்கு ஆறுதல் தரும் செய்தியாகும்.

தில்லைக்கூத்தன் அவர்களுடன் நான் உரையாடிய பொழுதெல்லாம் "ஈழத்தமிழ் மக்களுடைய எதிர்காலம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஒட்டி அமைய வேண்டுமென்பதில் மிகத் தெளிவாக இருந்தார். வட்டுக்கோட்டைப் பாதையிலிருந்து திசைமாற வேண்டுமென இந்தியாவோ அமெரிக்காவோ அல்லது உலகின் வேறெந்த நாடாவது அழுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்திருந்தாலும், அதனையும் எதிர்கொள்ளத் தமிழினம் தயங்காது என்பதை குறிப்பிட விரும்புகின்றோம். எனவே இலங்கையிலுள்ள சகல தமிழ் மக்களும் சர்வதேச தமிழ் சமுதாயமும் ஒன்றிணைந்து, பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இத்திருப்பணிக்கு உதவி வழங்குமாறு மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கின்றோம்" என்று தனது 'தமிழரின் விடிவு' என்ற நூலின் அறிமுகத்தில் குறிப்பிடும் இவர் அவ் அறிமுகத்தின் மற்றுமோர் பகுதியில் பின்வருமாறு உள்ளம் தொடும் தொடர்களை கையாள்கின்றார். 'ஆயதமேந்திப் போராட முற்பட்ட பிரபாகரன் வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றார். ஈழத்துக் காந்தி என வர்ணிக்கப்பட்ட செல்வநாயகத்தின் கனவும், தமிழ் இனத்திற்காக தன் உயிரையே தியாகம் செய்த குமார் பொன்னம்பலத்தின் கனவும் தெய்வ அருளால் நிச்சயம் நனவாகும் என்பதே எமது பூரண நம்பிக்கை' என்று அவர் கூறியுள்ள சொற்கள் 'ஆவது அறியும்' கூற்றாக தீர்க்கதரிசனம் வாய்ந்தவையாக விளங்குவது உறுதி.

இத்தகைய பெருமகனை அண்மையில் அவரது கொள்ளுப்பிட்டி கொழும்பு இல்லத்தில் சந்தித்த பொழுது தனக்கேயுரிய புன்முறுவலை வருவித்துக்கொண்டு 'நான் எவ்வளவு காலம் வாழப்போகிறேனோ தெரியவில்லை. பல்வேறு வகைப்பட்ட நோய்கள் என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றன. படுக்கையில் கிடந்த நிலையிற்றான் நான் சொல்பவற்றை ஒரு இளைஞன் எழுத செய்தி இதழ்களில் கட்டுரைகளாக வருகிறது. என்னிடம் உள்ளத்துடிப்பு உண்டு. ஆனால் உடலோ நோய்வாய்ப்பட்டு சோர்வுற்றுக் கொண்டு வருகிறது. எனக்கு எப்பொழுது சாவு வருமோ தெரியாது. இருந்தாலும் என் செத்த வீட்டிற்கு தம்பி நீ கட்டாயம் வர வேண்டும்' என்று கண்கலங்கிய நிலையில் அவர் கூறிய கூற்றுக்களை இன்று நினைக்கின்ற பொழுது கூட என் கண்கள் கலங்குகின்றன. ஆனால் அவரைத் தேற்றுகின்ற முறையில் தமிழீழம் காணாது நீங்கள் சாகப்போவதில்லை என்று நான் கூறியபோது என்றும் மறக்க முடியாத அளவு அவர் பூத்த புன்னகை எம் நினைவில் நிற்கின்றது. விரைவில் தன் உயிர் பிரிவதை அவர் நன்கு உணர்ந்த நிலையிலும் என் நம்பிக்கைச் சொற்களுக்கு நன்றி கூறும் முறையில் அவரது புன்னகை விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்தைந்து வயது என்பது சாகவேண்டிய வயது அல்ல. மருத்துவ உலகு இன்று கண்டுபிடித்துள்ள மருந்துகள் பல நோய்களுக்கு மாமருந்து என்பதை நாம் ஏற்கின்ற பொழுதும் விதியை நாம் வெல்வது கடினம் என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். மூப்பு, பிணி, சாக்காடு என்பது எல்லோரும் உணர வேண்டிய புத்தரின் தத்துவ விளக்கமாகும். ஆகவே இந்த உலகின் இயற்கைக்கமைய அவரும் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். ஆனால் தான் சாக முன்பு ஒன்று ஈழத்தைக் காணவேண்டும் அல்லது ஈழத்தை காண வழியைக் காணவேண்டும் என்று அவர் துடித்த துடிப்பை நாம் எளிதில் மறக்க முடியாது. எனவே அவருடைய நீங்கா ஆவலை நிறைவேற்றும் வகையில் விரைவில் தமிழீழத்தை தோற்றுவிப்பது நாம் அவருக்கு செய்யும் தலையாய, கைமாறாகும், அப்போதுதான் அவரது ஆவி அமைதியுறும். அவர் விட்டுச்சென்ற பணியை இனிது நிறைவேற்றி அவரின் இன்னுயிர் அமைதி காணத் துணை நிற்போமாக.

"இலங்கைத் தமிழர் கண்ணீர்" கண்டு கலங்கிய நம் தில்லைக்கூத்தன் அவர்கள், 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசரின் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற முழக்கத்தினால் ஆட்கொள்ளப்பட்ட நம் தில்லைக்கூத்தன் அவர்கள், 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகரின் 'யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம்' என்ற வீர முழக்கத்தினால் ஈர்க்கப்பட்டு "யாமார்க்கும் குடியல்லோம்" என்ற நூலினை நாம் நுகர்ந்து மகிழ வழங்கிய இப்பெருமகன் தமிழனின் விடிவினைக் காண, Dawn of Tamil Freedom என்பதை உணர்த்த தமிழரின் விடிவு எனும் தலையாய நூலை எமக்கு தந்து எம்மிடம் இருந்து விடைபெற்றுள்ளார்.

அவரின் 'தமிழரின் கண்ணீர்' கண்டு கண்ணீர்விட்ட நாம் 'யாமார்க்கும் குடியல்லோம்' என்று அவரோடு சேர்ந்து ஓங்கி ஒலித்துள்ள நாம், "தமிழனின் விடிவை"க் காண்பதற்கு நாம் விடாது பாடுபட்டு, தமிழனின் விடுதலையை விரைவில் பெற்றேயாகவேண்டும். இவ்வரிய நூல்களைத் தந்த தில்லைக்கூத்தன் அவர்கள் இன்று எம்மிடையே இல்லை. ஆனால் Thomas Carlyle கூறியதற்கமைய in books lie the sole articulate audible voice of the past, when the body and the material substance of it has altogether vanished like a dream ஐ உடலும் உடல் சார்ந்த அனைத்தும் கனவு போல் மறைந்த நிலையில் இயங்குகின்ற கேட்கத்தக்க குரலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவது மறைந்த நூலாசிரியர் படைத்த நூல்களே என்பதற்கமைய, தில்லைக்கூத்தன் அவர்களின் நூல்கள் என்றும் அவரின் புகழ் பாடுவது உறுதி.

நாம் அடிக்கடி கூறுவதற்கமைய, வாழும்போது செத்தவர்கள் பலர். ஆனால் செத்தும் வாழ்பவர்கள் சிலர் உண்டு. அந்த சிலருள் நம் தில்லைக்கூத்தனும் ஒருவர் என்பதை உணர்ந்து நாம் செம்மாந்து இருக்கலாம்.

தில்லைக்கூத்தன் மறைந்த போது அவரது இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவருடைய குட்டிப் பேரன் தன் பாட்டனாரைப்பற்றி எம் கண்கள் கலங்குமாறு பின்வருமாறு கூறினார்.

"He loves freedom and always talks about Tamil freedom. He and us are Hindus. But he worshipped the Tamil Leader Prabaharan". [என் தாத்தா என்றும் விடுதலையைப் பற்றியே பேசுவார். குறிப்பாக தமிழர் விடுதலை என்ற சொல்லாட்சி அவர் நாவில் என்றும் நடனம் புரியும். அவரும் நாங்களும் இந்துக்கள் தான். ஆனால் அவர் வழிபட்டது தமிழர் தலைவர் பிரபாவையே ஆகும்] நாமும் எம் வழிபடு தெய்வம் பிரபாகரனை மறைந்த தில்லைக்கூத்தன் வழியில் வழிபட்டு விடைபெறுவோமாக.

ஈழ விடுதலைக்கு தில்லைக்கூத்தன் அவர்கள் ஆற்றிய பணியை நினைவு கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அவருக்கு "நாட்டுப்பற்றாளர்" என்ற விருதினை வழங்கியது. எனக்கும் அவருக்கும் இடையில் நிலவிய நெருங்கிய நட்புக் காரணமாக இவ்விருதின் உள்ளடக்கத்தை அவரின் இறுதி நிகழ்ச்சியில் வாசித்து அவரின் திருவுடலின் மேல் வைக்கும்படி விடுதலைப்புலிகள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். இது நிறைவேற்றப்பட்ட நிலையில் அவரைப் பற்றிய விருதுச் சான்றிதழ் அவரது குடும்பத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**மா. க. ஈழவேந்தன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*
*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி நல்லையா குமரகுருபரனின் அனுதாபச் செய்தி

# "தமிழ்த் தேசியத்தை தேசியத் தலைவரை தலைநகரிலிருந்து நேசித்த ஒரு தேசப்பற்றாளர் தில்லைக்கூத்தன் நடராஜா"

தனது இறுதிமூச்சுவரை தலைநகரிலிருந்து தமிழ்த் தேசியத்திற்காக "பிரபாகரன்" என உரத்து ஒலித்த குரல் அமைதி கண்டுவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் புலமைமிகு ஆலோசகராக (Expert Consultant) துறைமுகவியல், விஞ்ஞானத்துறை சர்வதேச ஆலோசகராக தெற்காசியாவெங்கும் ஐ.நா. சேவையில் பணியாற்றி இளைப்பாறிய மூதறிஞர் இளையதம்பி நடராஜா அவர்கள் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறை கண்டு கிளர்ந்தெழுந்தார். இளைப்பாறிய பின் தலைநகரில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் தமிழ்த்தேசிய உணர்வுமிக்க அரசியலாளரை அழைத்து ஒரு சந்திப்பினை ஏற்படுத்தினார். மனோ கணேசன், சந்திரசேகரன் போன்ற வடக்கு கிழக்கு தாயகத்திற்கு இப்பாலான தமிழ்த் தளங்களின் தலைவர்கள் அன்றைய கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு தலைவர் விஜயசிங்கம், தமிழ் காங்கிரஸ் சார்பாக நானும் என் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களும் கலந்து கொண்டோம். தலைநகரில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தார்மீக ஆதரவை நல்க வேண்டிய எமது கடமையை, ஒரு தீர்வு கிடைக்கப் பெறுமானால் அது விலை போகாத தமிழீழ விடுதலைப்புலிகளின் விடாமுயற்சியாலும் பலத்தாலுமே அமைய முடியும் என்பதையும் அவர் கூட்டத்தில் வலியுறுத்தினார். நான் நினைக்கின்றேன் அன்று முதல் மேல்மாகாண மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, ஏற்கனவே புலிகளின் அரசியற் கோட்பாடுகளை ஆதரித்து வரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழு என்பன நேசக்கரத்துடன் அன்றைய சந்திரிக்கா அரசின் தமிழினத்தின் மீதான அராஜகங்களுக்கெதிராக தமது கடமையை உணர்ந்தே செயற்பட்டு வந்திருக்கின்றன, வருகின்றன. அன்று தமிழ் தேசியத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தியவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாகுவதில் என்னோடு முன்னின்று செயற்பட்டவர் திரு. நடராஜா. அமரர் மாமனிதர் அவர்கள் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடன் இணைந்து செயற்பட்ட காலத்தில் முக்கியமான வெளிநாட்டுத் தூதரகங்கள், தூதுவர்கள் இல்லங்கள் என சென்று தமிழ் மக்களதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் நிலைப்பாட்டினையும் அபிலாஷைகளையும் நியாயப்படுத்தி வந்தார். தனது இப்பணியை வெளிநாட்டு விஜயங்களின் போதும் அவர் செய்யத் தவறியதில்லை. இதற்காக இவர் வெளிநாட்டவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதும் உண்டு. குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவின் பின் நான் அவருடன் இணைந்து இப்பணியில் செயற்பட்டேன் என்பது பெருமை தருகின்றது. இந்தியா பற்றிய ஈழத்தமிழினம் சார்ந்த நிலைப்பாட்டினை உக்கிரமாக விமர்சித்தவர் தில்லைக்கூத்தன் நடராஜா. தமிழ்த் தேசியவாதத்தை வலியுறுத்துவதில் தனது பேனாவை தில்லைக்கூத்தன் எனும் பெயரோடு உலாவரவிட்டார். அவரது பேனா மிக வீரியமாகவும் தமிழ் உணர்வோடும் அமைந்தது.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவின் பின் நான் பொதுச் செயலாளராக இருந்த ஈராண்டுகள் தில்லைக்கூத்தன் அவர்கள் எமது சிரேஷ்ட உப தலைவராக விளங்கினார். தமிழ் காங்கிரஸிற்குள் கொள்கை நிலைப்பாட்டை திடமாக வலியுறுத்தி வந்தவர் தில்லைக்கூத்தன் என்றால் மிகையாகாது. இந்த உண்மையை தம்பி கஜேந்திர குமாரும் அன்னாரின் நூல் வெளியீட்டு விழாவில் பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றார். வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திற்கு இப்பால் மேல் மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் தமது தனித்துவத்தினைப் பேணிக்கொண்டு, தமிழர் ஒருமைப்பாட்டின் மூலமாகத்தான் பேரினவாத ஆளும் கட்சிகளுடன் பேசவல்ல தமிழ் சக்தியாக விளங்க முடியும் எனும் கோட்பாட்டினை திடமாக நம்பினார். அந்த வகையில் துணிவுள்ள துடிப்புள்ள இளம் தலைநகர்த் தலைமைக்கான அம்சங்களை மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனில் கண்டு அவரதும் மேல் மாகாண மக்கள் முன்னணியின் வெற்றிக்காகவும் உரத்து குரல் கொடுத்தார் தில்லைக்கூத்தன் அவர்கள். தலைநகர் வாழ் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமிழன் தனித்துவம் காத்து மேல் மாகாண மக்கள் முன்னணியை தமிழ்த் தேசியத் தலைமையின் நேச சக்தியாக கருதி வாக்களிக்கக் கோரினார். இந்த வகையில் பல பேரினவாதக் கட்சியின் நேரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளர்களின் அச்சுறுத்தல்களுக்கும் ஆளானார். தலைநகரில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக குரல் கொடுத்த மாமனிதர் குமார் போல் தலைநகர் கோயில்களில் உரத்த குரலில் பிரபாகரன், கேட்டை நட்சத்திரம் என்று தமிழ்த் தாயகம் வாழ அர்ச்சனை செய்த தில்லைக்கூத்தனின் உணர்வு கண்டு நான் பிரமித்து நின்றதுண்டு.

196 கட்டுரைகளில் தமிழ்த் தேசிய இனத்தின் துன்பங்களை, தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ அரசியற் பலத்தை, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியாவின் இலங்கைத் தமிழர் நிலைப்பாட்டை அக்குவேறு ஆணிவேறாக விமர்சித்தவர் தில்லைக்கூத்தன். எனக்கும் அவருக்குமான நெருக்கமான ஈடுபாடு மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் காலம் தொட்டமைந்தது. அது மட்டுமன்றி எனக்கிருக்கக்கூடிய உணர்வு மிக்க உள்ளத்தை தொட்ட விடயம், ஈராண்டுகள் என் தலைவன் விட்டு சென்ற பொதுச் செயலாளர் பதவியை ஏற்று தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளராக இருந்த போது சிரேஷ்ட துணைத் தலைவராக விளங்கிய மூதறிஞர் தில்லைக்கூத்தன் ஈராண்டுகளுக்கப்பால் எனது பதவி தமிழ்க் காங்கிரஸில் சிலர் பதவி ஏற்க வேண்டிய காரணத்திற்காக மாற்றப்பட்ட போது எனது பதவி பறிக்கப்பட்டமை அநீதியானது அதற்கான காரணம் அற்பத்தனமானது என தனது பதவியையும் தூக்கி எறிந்து கட்சியிலிருந்தும் விலகிக் கொண்ட ஒரு கொள்கைப் பற்றாளர், மனச்சாட்சியின் சின்னம் தில்லைக்கூத்தன் நடராஜா ஐயா அவர்கள் என்பதை நன்றியுணர்வோடு நினைத்துப்பார்க்கிறேன். தமிழ்க் காங்கிரஸில் பொதுச் செயலாளராகிய எனக்கு அநீதி இழைத்துவிட்டது கட்சியென தனது உப தலைவர் பதவியை தூக்கி எறிந்த உயர்ந்த உள்ளம் அவருடையது. தமிழ் மக்களின் மேல் மாகாணத் தளத்தை நன்கு அடையாளம் கண்டு அவர்கள் பேரினவாதிகளிடம் விலை போனால் தமிழ்த் தாயகப் பூமியின் சுதேசியத்தின் பாலான தார்மீக கடமையை தலைநகர் வாழ் தமிழினம் இழக்க நேரிடும், ஆதலினால் தலைநகர்த் தமிழர்கள் பலம் பொருந்திய மேல் மாகாண மக்கள் முன்னணியினை ஆதரித்து ஒரு தன்மான பலத்தை எடுத்து காட்ட வேண்டுமென்று விரும்பினார்.

அந்த வகையில் மேல்மாகாண மக்கள் முன்னணியின் அரசியல் ஆலோசகராகவும் கோட்பாட்டாசிரியராகவும் இறுதி மூச்சுள்ள வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினார் திரு. தில்லைக்கூத்தன். தனது பிள்ளைகளும் மருத்துவ டாக்டர்களாக கலாநிதிகளாக படிப்பித்து சிறப்பு கண்டவர் திரு. நடராஜா. ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பட்டதாரி. துறைமுக அதிகாரசபையின் தகவற் தரவு நிபுணத்துவ பணியின் முன் சில காலம் ஆசிரியராக பணியாற்றி ஐ.நா. சபையின் பொருளாதார திட்டமிடலுக்கான கலைக்கழகத்தின் (UN Institute for Economic Planning admitted Mr. Nadarajah as a Fellow of the Institute) மூதறிஞராகவும் கல்விகற்று சவுதி அரேபியா, சிங்கப்பூர், தென் கிழக்காசியாவிற்கான சர்வதேச ஆலோசகராக நியமிக்கப்பட்டார். ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் சர்வதேச துறைமுக ஆய்விற்கென நியமிக்கப்பட்ட அறுவர் குழுவில் இவரும் ஒருவர். யாழ் பல்கலைக்கழகத்தில் இவர் வருடம் தோறும் புலமைப்பரிசு நிதியத்தை கொண்டவர். பல மாணவர்கள் இவரது புலமைப்பரிசில்களைப் பெறுகின்றார்கள்.

இறுதியாக ஒரு விடயம், தமிழ்த் தேசியப் பணிக்குழுத் தலைவர், நாட்டுப்பற்றாளர் தில்லைக்கூத்தனின் மறைவிலும் எனக்கு ஒரு திருப்தியிருக்கின்றது. தலைநகரிலிருந்து தமிழ்த் தேசியத்தை நேசித்த, நான் சார்ந்த இரு அமைப்புக்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளர் குமார் அவர்களின் மறைவில் தமிழ்த்தேசியத் தலைமை “மாமனிதர்” விருது வழங்கி கௌரவித்தது. தமிழ் தேசிய பணிக்குழுத் தலைவர் மேல் மாகாண மக்கள் முன்னணியின் அரசியல் ஆலோசகர் தில்லைக்கூத்தன் நடராஜா அவர்கள் மறைவில் “நாட்டுப்பற்றாளன்” கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழர் நம் அரசியற் பாதை புடம் போடப்பட்டிருக்கின்றது, வழிகாட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்த்தேசத்தின் வரலாற்றில் தில்லைக்கூத்தன் எனும் நாமம் தனக்கென ஒரு இடத்தை வகுத்துள்ளது.

**கலாநிதி நல்லையா குமரகுருபரன்**
*செயலாளர்*
*தமிழ் தேசிய பணிக்குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதாபச் செய்தி

தமிழர் நாம் இன்று ஒரு துணிவுடைய தமிழ்நாட்டுப் பற்றுள்ள தலைசிறந்த எழுத்தாளனை இழந்துள்ளோம். இளையதம்பி நடராசா தில்லைக்கூத்தன் என்ற புனைப்பெயரில் தமிழரின் உணர்ச்சியை பிரதிபலிக்கும் பாணியில் ஆதாரங்களோடு எழுதியிருந்தார். அன்னாரின் மறைவு பெரியதொரு இழப்பாகும்.

நான் அவரோடு துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் 1959ம் ஆண்டு முதல் பணி புரிந்த நண்பன். அவர் துறைமுக சேவையில் இருந்து விலகி ஐக்கிய நாட்டுச் சேவையில் பணி புரிந்தவர். ஆனால் எங்கிருந்தாலும் எங்களுடைய நட்பு தொடர்ந்து இருந்தது. சிங்கள அரசாங்கங்களின் பாராபட்சமான செயற்பாடுகளால் எமது நாடு சீரழிந்து சீர்குலைந்த நிலைமையில் நிற்பதையிட்டு மனம் வருந்தி எந்த ஒரு நேரத்திலும், எந்த அவையிலும் எடுத்துரைக்க அவர் தவறியதில்லை.

உலக நாடுகள் தமிழரின் பிரச்சனைகளை கரிசனை கொள்ளா எந்த ஒரு வேளையிலும் அதற்கு எதிராக எடுத்துரைக்க துணிவோடு செயலாற்றிய தமிழன் நடராசா. இதற்காக பலமுறை பொதுக் கூட்டங்களை நாங்கள் ஒழுங்கு செய்து நடாத்த அவர் ஓயாது உழைத்தார். தமிழரின் பண்பாடு சரித்திர மேம்பாடு உள்ளதொரு சமுதாயம் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இருப்பதை பொறுக்க முடியாது அவர் கட்டுரைகளின் வாயிலாக “நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்” என்று முழங்கி எழுதினார். “அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா” என்று அஞ்சாமல் வரைந்தெழுதினார். அவரின் எண்ணம், ஆவல் எல்லாம் நிறைவேற வேண்டுமென்று பிரார்த்தனை செய்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்போம்.

**— செ. சின்னக்கோன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Mr. M. Leelaratne
## his dedicated carer....

ගරු නටරාජා මහතා,


මෙම මහතාව මා දැන හඳුනගෙන දැනට අවුරුදු පහකට ආසන්නය. එසේ මා ඔහු හඳුනාගත්තේ ඔහු සැමවිටම මගේ ත්‍රීරෝදරථයෙන් ගමන් බිමන් ගොස් ඇති නිසාය. ඔහු ජාතිභේද නොතකා මට බොහෝ උදවු කර ඇත. ඔහු ඉතාමත් කරුණාවන්ත වන අතර මට පියෙක් මෙන් අවවාද දුන්නේය. මා දුටු සෑම අවස්ථාවේදීම ඔහු මා හා සුහදව කතාකලේ කිසිම පැකිලීමකින් තොරවය. ඔහු මට කල උපකාර මට කෙදිනකවත් අමතක නොවේ මම ඔහුට සදාණයගැතිය.

ලීලාරත්න මානගේ
ත්‍රීරෝදරථ රියදුරු



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FAMILY TREE






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தில் ஈடு இணையற்ற அன்பின் உருவாய் திகழ்ந்த எம் ஆருயிர் தந்தை அமரர் இளையதம்பி நடராஜா அவர்கள் சிவபதமடைந்தபோது, எமது ஆறாத்துயரில் பங்குகொண்டு ஆறுதல், தேறுதல் அளித்த அனைவருக்கும், தொலைபேசி மூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், தன்னலம் கருதாது இவ்வேளையில் உதவிய நண்பர்கள், உற்றார், உறவினர்களுக்கும், இன்று நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றுவோருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை பணிவுடன் தெரிவிக்கும் அதேவேளையில், எமது தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.


17, Pedris Lane, Colpetty
Colombo 3

**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org